தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-11-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை காலத்தில் மிளகாய் வற்றலின் விலை கிலோவிற்கு ரூ.55-60 வரை இருக்கும்

உலக அளவில் மிளகாய் உற்பத்தி மற்றும் நுகர்வில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. 2012-13ஆம் ஆண்டில் இந்தியாவில் 8 இலட்சம் எக்டேரிலிருந்து 13 இலட்சம் டன் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டது. மேலும் அதே ஆண்டில் 2.81 இலட்சம் டன் மிளகாய் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தியாவில் மிளகாய் உற்பத்தியில் ஆந்திரப்பிரதேசம் 53 சதவீதம் பங்களித்து முன்னிலை வகிக்கிறது. அதைத் தொடர்ந்து கர்நாடகா (8.23 சதவீதம்), மேற்கு வங்காளம் (7.69 சதவீதம்), மத்தியப் பிரதேசம் (7.20 சதவீதம்), ஒடிசா (5.38 சதவீதம்), குஜராத் (5.27 சதவீதம்), மகாராஷ்டிரா (3.51 சதவீதம்) மற்றும் தமிழ்நாடு (1.77 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் பங்களிக்கின்றன.

தமிழ்நாட்டில் 2011-12ஆம் ஆண்டில் 58,603 எக்டரிலிருந்து 30,298 டன்கள் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டது. இராமநாதபுரம் (குண்டு), தூத்துக்கு (குண்டு), சிவகங்கை (சம்பா), விருதுநகர் (சம்பா) மற்றும் திருநெல்வேலி (சம்பா மற்றும் குண்டு) ஆகியன தமிழ்நாட்டில் மிளகாய் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். இந்தியாவில் நவம்பர் முதல் மே மாதம் வரை மிளகாய் வற்றல் வரத்து இருக்கும். நவம்பர் மாத இறுதியில் மத்தியப்பிரதேசம் மற்றும் கர்நாடகா மிளகாயும் டிசம்பர் மாத இறுதியில் ஆந்திர மற்றும் மகாராஷ்டிரா வற்றலும் சந்தைக்கு வரும். தமிழக மிளகாய் வற்றல் வரத்து மார்ச் மாதம் தொடங்கி மே மாதம் வரை இருக்கும். பயிராகும் அனைத்து மாநிலங்களிலும் பயிரின் நிலை, குறிப்பாக ஆந்திரப்பிரதேச பயிரின் நிலை, கையிருப்பில் உள்ள வற்றலின் அளவு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதித் தேவை ஆகியன மிளகாய் வற்றலின் விலையை நிர்ணயிருக்கும் முக்கிய காரணிகளாகும். ஆண்டுதோறும் இந்திய உற்பத்தியில் 70 முதல் 80 சதவீத மிளகாய் உள்நாட்டு நுகர்வுக்கும் 10 முதல் 20 சதவீத மிளகாய் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. வர்த்தக மூலங்களின் படி ஆந்திராவின் தற்போதைய கையிருப்பு 40 இலட்சம் மூட்டைகள் ஆகும் (1 மூட்டை – 35 கிலோ) மேலும் தமிழகத்தில் 2 இலட்சம் மூட்டைகள் உள்ளன. தற்போது விருதுநகர் சந்தையில் குளிர்பதனத்தில் வைக்கப்பட்ட மிளகாய் வற்றல் குவிண்டாலுக்கு ரூ.6500-7000 வரை விற்கப்படுகிறது. தமிழகத்தில் அக்டோபர் நவம்பர் மாதங்களில் மிளகாய் நாற்றாங்கால் மற்றும் நேரடி விதைப்பின் மூலம் பயிரிடப்பட்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. தற்போது பயிரிடப்பட்டு பிப்ரவரி முதல் மார்ச் 2014 இல் சந்தைக்கு வரும் மிளகாய் வற்றலின் விலையை அறிந்து கொள்ள விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், விருதுநகர் சந்தையில் கடந்த 16 ஆண்டுகளில் நிலவிய வற்றல் விலையை ஆய்வு செய்தது. ஈபொருளாதார மற்றும் வர்த்தக ஆய்வு முடிவுகள் பிப்ரவரி –மார்ச், 2014 இல் மிளகாய் வற்றலின் விலை குவிண்டாலுக்கு ரூ.5500 முதல் 6000 வரை இருக்குமென்று உறுதி செய்கின்றன. தற்போது எதிர்பார்க்கப்படும் வழக்கமான வரத்து, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதித் தேவை ஆகிய காரணங்களினால் மேற்கூறிய விலையே இருக்கும். இந்த விலையைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் மிளகாய் விதைப்பு, நடவு பற்றிய முடிவுகளை மேற்கொள்ளலாம்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641003, தொலைபேசி- 0422-2431405.

<u>மேலும் தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி- 0422-6611284.

மக்கள் தொடர்பு அலுவலர்